மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 4

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विल्लज मिनस्ट्री

ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**பிப்ரவரி 2010**

| ஆண்டு சந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ.250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2010 பிப்ரவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## அவர் (கர்த்தர்) உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

நீதிமொழிகள் 3 : 6



கர்த்தருடைய கிருபையினால் காஞ்சிபுரம் மாவட்டம் – **குன்றத்தூர்** AJC ஜெபவீடு 15.12.2009 அன்று தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி :**

**பாஸ்டர் ஜோசப் ஜெபமணி,**
***Yishun Evangelical Church***
***Singapore.***

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive Officer Letter Dated: 10.01. 2010**



கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய கிருபையினால் புதுவருட கொண்டாட்டம் எங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. தேவனைத் துதியுங்கள்!

**2010** ஜனவரி மாதத்திலிருந்து TVGM **'தரிசனமுகாம்கள்'** ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிலுள்ள ஏதாவது ஒரு மாவட்டத்தில் நடத்தவிருக்கிறோம். இந்த முகாமின் நோக்கம் **100–கிராம ஊழியத்திற்கு அதிக தன்னார்வத் தொண்டர்களையும், ஜெப வீரர்களையும் எழுப்புவதுமாகும்.** இந்தப் பத்திரிக்கை தங்கள் கைகளில் கிடைக்கும்போது, நாங்கள் YMCA திருச்சியில் ஒரு தரிசமுகாமை 2010 ஜனவரி 30ல் முடித்திருப்போம். இந்த மாதத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு **தரிசனமுகாம்** நடைபெறும்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம் – **குன்றத்துார்** கிராமத்தில் ஒரு ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

பெரம்பலுார் மாவட்டம் – **வேப்பூர் யூனியனில் '100–கிராம ஊழியம்'** நடைபெற்றது. 227 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து இயேசுவைப் பற்றி கூடுதலாக அறியவும், வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பவும் கேட்டுக் கொண்டார்கள். தேவனைத் துதியுங்கள்!

கர்த்தருடைய கிருபையினால் என்னுடைய U.K. பிரயாணம் அநேக மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. எனக்கு 8 தமிழ் ஆலயங்களிலும், 2 ஆங்கில ஆலயங்களிலும் ஊழியம் செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது. தேவனுக்கே மகிமை!

நாங்கள் செய்யும் எல்லா ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்கள் ஜெபவிண்ணப் பங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**எல்லா மகிமையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கே!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

# அவர் ( கர்த்தர் ) உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீதி. 3 : 6

இம்மாத வாக்குத்தத்தத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் அன்பு தேவ பிள்ளைகளே, தேவ ஊழியர்களே!

இந்த மாதத்தில் கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**நீதிமொழிகள் : 3:6**

**"அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்".**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

**நீதி. 3:5,6**ல் உள்ள வாக்குத்தத்தின் முன்னால் உள்ள வசனங்களைப் பார்க்கும்போது, தேவன் மூன்று காரியங்களை நாம் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

முதலாவது: **நாம் முழு இருதயத்தோடும் நம் தேவனாகிய கர்த்தரில் நம்பிக்கையாயிருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.**

இரண்டாவது: **நம்முடைய சுய புத்தியின் மேல் சாயாமல் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.**

மூன்றாவது: **நமது வழிகளிலெல்லாம் தேவனை நினைத்துக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும்.**

இம்மூன்று காரியங்களையும் நாம் செய்யும் போது, தேவன் நமது பாதைகளை செவ்வைப்படுத்துவார். மேலும், நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் நமது பாதைகளைத் தொடர்ந்து செவ்வைப்படுத்துவார்.

ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம், எனக்கு பொருளாதார வசதி இல்லாத சூழ்நிலையில் இருக்கிறேனே ? அல்லது இந்த உலகத்தில் எனக்கு உதவி செய்ய ஒருவருமில்லையே ? அல்லது என்னை பராமரிக்க யாருமேயில்லையே ?என்று. உங்கள் எதிர்காலம் பல தடைகளை எதிர் கொள்வதாகவும், உங்கள் பாதைகள் கரடு முரடாகவும் காணப்படலாம். ஆனால், கர்த்தர் சொல்லுகிறார்:

**"நான் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவேன்"**

இன்று உங்கள் வாழ்வில் பல திட்டங்களை வைத்திருக்கலாம். திருமண திட்டங்கள், தொழில் திட்டங்கள், ஊழியத் திட்டங்கள், மேலும் இது போன்று வேறு திட்டங்கள் இருக்கலாம். ஆனால், தேவன் உங்களோடு இணைந்து திட்டமிட விரும்புகிறார். நீங்கள் மற்றவர்களோடு இணைந்து திட்டம் போடும் முன் தேவனிடத்தில் உங்கள் திட்டங்களை ஒப்புவியுங்கள். அவர் உங்கள் திட்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டு உங்கள் பாதைகளை செவ்வையாக்குவார்.

**நீதி. 20 :24** ல் வாசிக்கிறோம். கர்த்தராலே மனுஷருடைய நடைகள் வாய்க்கும்; ஆகையால் மனுஷன்தன் வழியை அறிந்துகொள்வதெப்படி ? இதேபோல், அநேக முறை நம்முடைய பாதைகளை நாமே அறிய முயலுகிறோம். ஆனால் நாம் முதலில் அறிய வேண்டியது, நமது சிருஷ்டிகர் நாம் பிறக்கும் முன்பே நமது வழிகளை விதித்து வைத்திருக்கிறார். ஆகவே, அவரே நமது வழியை புரிந்து கொள்ளவும், நம்மை வழிநடத்தவும் அறிந்திருக்கிறார். ஆனால் நாம் செய்ய வேண்டியது, நம் நம்பிக்கையை அவர்மேல் வைக்க வேண்டுமே தவிர நமது சுயபுத்தியின் மேல் சார்ந்திருக்கக் கூடாது.

**எரேமியா 10:23**ல் எரேமியா கூறுகிறார்: கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

நாம் தேவனாகிய கர்த்தராலே ஆளப்படுகிறோம்; அவரே நம்முடைய நடைகளை நடத்துகிறார். நம்முடைய தேவன், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கரிசனை உள்ளவராயிருக்கிறார். அவர் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடையிலும் வழிநடத்தவும், நம்மோடு இணைந்து நமது வாழ்க்கை பயணத்தின் ஒவ்வொரு நடையிலும் கூடவே நடக்கவும் விருப்பமுள்ளவராய் இருக்கிறார். ஆனால் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடையிலும் தேவனே நம்மை வழிநடத்தும்படி அவரை அனுமதிக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 16:9** சொல்கிறது: மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்; அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.

நாம் நம்முடைய வழியைப் பற்றி திட்டமிடுவது நல்லதுதான். ஆனால் தேவனை நமது திட்டங்களில் தலையிடவும், நமது பாதைகளில் நடத்திச் செல்லவும் அனுமதிக்க வேண்டும். நமது நடைகளில் தேவனை அனுமதிக்கும்போது அவர் நமது பாதைகளை செவ்வையாக்குவார். உங்கள் திருமண காரியமாக இருக்கலாம், தொழிலாக இருக்கலாம் அல்லது ஊழியமாக இருக்கலாம் . . .

மேலும், அவர் நம்முடைய திட்டங்களில் கரிசனை உள்ளவராக இருக்கிறார். அவர் நமது திட்டங்களில் மையமாக இருக்க விரும்புகிறார். அவரில் நாம் வளர விரும்புகிறார். அநேக முறை நமது திட்டங்கள் நமது பார்வைக்கு நல்லதாக தோன்றும், ஆனால் தேவன் அவற்றை நம்மிடமிருந்து எதிர்பார்த்தது அல்ல. நாம் அவரை முற்றிலும் நம்பும்போது அவர் நமது பாதைகளை செவ்வையாகும்படி செய்ய வழிநடத்துவார்.

உங்கள் வாழ்க்கையில் அநேக திட்டங்கள் இருக்கலாம். ஆனால் அவைகளை தேவனிடத்தில் ஒப்புவித்து அவரே நம்முடைய நடைகளை வழிநடத்த அனுமதிப்போமானால்,அவர் உங்களுக்கு சரியான திட்டத்தை தெரிந்தெடுக்க உதவி செய்வார். உங்கள் வாழ்க்கையில் இது அவருடைய சித்தமாக இருக்கும். ஆனால் உங்கள் எல்லா திட்டங்களையும் தேவனிடத்தில் ஒப்புவித்து, உங்கள் நடைகளை வழி நடத்த அனுமதிப்பீர்களென்றால், சரியான திட்டம் எது என்பதை தெரிந்து கொள்ள உதவி செய்வார். அதுவே உங்கள் வாழ்வில் தேவ சித்தமாய் அமையும்.

**நீதிமொழிகள் 19:21**ல் வாசிக்கிறோம்.

மனுஷனுடைய இருதயத்தின்
எண்ணங்கள் அநேகம்; ஆனாலும்
கர்த்தருடைய யோசனையே
நிலைநிற்கும்.

மனிதர்களாயிருக்கும் போது அநேக திட்டங்கள், தெரிந்தெடுப்புகள் நமது மனதில் உருவாகிறது இயற்கைதான். ஆனால் தேவன் நம்மை வழி நடத்த அனுமதிக்கும்போது சரியான திட்டத்தை தெரிந்தெடுக்க உதவியாயிருப்பார். இது தேவ சித்தம் நம்மில் நிறைவேற உதவியாயிருக்கும்.

சாலமோன் **நீதிமொழிகள் 8:21** ல் சொல்கிறார்: அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்.

ஆம், உங்கள் வாழ்விலும் இதைச் சொல்ல இயலும். இப்படிச் செய்வதால் உங்கள் வாழ்வில் நீதியானது ஒரு பொக்கிஷமானதாகஅமையும்.

**சங்கீதம் 37:23**ல் சொல்கிறது: நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

ஆம்! நாம் தேவனை நம் வாழ்வில் இடைபட அனுமதிக்கும்போது, அவர் நம் நடைகளை உறுதிப்படுத்துவார். அவரின் வழிகளை நம் வாழ்வில் அவர் காணும் போது நம்மேல் பிரியமாயிருப்பார்.

ஆனால், சங்கீதக்காரன் தேவ வழிநடத்துதலை **சங்கீதம் 25:4**ல் எதிர்பார்க்கிறான், அவன் கேட்கிறான்: "கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்".

நாம் கையிட்டு செய்யும் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய வழிநடத்துதலை நாட வேண்டும். இதனால் அவருடைய வழி நம் வாழ்வில் நிலை நாட்டப்படுகிறது.

மேலும் **சங்கீதம் 27:11** ல் இப்படி கேட்கிறான் "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்". இது போல நாம் காரியங்களை செய்யும் போது, கர்த்தருடைய வழியை நாம் கற்றுக் கொள்ளும் போது நமது எதிராளிகளை நமது வாழ்வில் வென்று விடலாம். நமது தடைகளை மேற்கெண்டு கடந்து போகவும், நமது தடைகள் தேவனை மகிமைப்படுத்துவதற்கான ஒரு தருணம் என்பதையும் கற்றறியலாம். நாம் எவ்வளவுக்கு அதிகமாக தேவனை நம்புவதற்கு கற்றுக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக சமனான பாதையில் கர்த்தர் நடத்திச் செல்வார்.

தேவனுடைய வல்லமை. புகழ்ச்சியினிமித்தம் அவர் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். சங்கீதக்காரன் **சங்கீதம் 31 : 3**ல் சொல்வதுபோல் "என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்". நமது வாழ்க்கையிலும் இப்படி சொல்லும்படியாக தேவனே எல்லா வேளைகளிலும் நமது கன்மலையும், கோட்டையுமாய் இருப்பார்.

மேலும், **ஏசாயா 26:7**ல் வாசிப்பது போல, "நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்".

இறுதியாக, கர்த்தர் தம்முடைய மகிமைப் பிரஸ்தாபத்தினால் உங்கள் வாழ்க்கையின் எல்லா தடைகளையும் முறித்துப் போடுவார். அவர் தமது வல்லமையை நீங்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் காண்பிப்பார். உங்கள் வாழ்க்கையில் காணப்படும் எல்லா அந்தகாரத்தையும் நீக்கிப் போடுவார். உங்கள் வாழ்க்கையில் அவர் எவ்வளவு பயங்கரமானவர் என்பதை உணர்ந்து அவரை மகிமைப்படுத்துங்கள்.

**ஏசாயா 42:16**ல் தேவன் உரைக்கிறார்: "குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன். இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்".

**பக்தன் இப்படி பாடுகிறார்:–**

***தேவன் ஒரு பாதையை உண்டாக்குவார்***
***ஒரு பாதையும் தெரியாத நேரத்தில்***
***நாம் காண முடியாத வழிகளில்***
***அவர் கிரியை செய்கிறார்.***

பக்தன் பாடுவது போல் பாடிக் கொண்டேயிருங்கள். இந்த மாதம் உங்கள் கரடு முரடான வழிகளை செம்மையாக்குவார், உங்கள் பாதைகளை நேராக்குவார்.

உங்கள் வாயினால் உங்கள் விசுவாசத்தை இந்த மாதம் அறிக்கை செய்து கொண்டேயிருங்கள்.

**நான் இயேசுவில்**
**நம்பிக்கையாயிருக்கிறேன்.**
**என் பாதையை நேராக்குவார்.**
**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு "100 - கிராம ஊழியம்"** திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

# வேலூர் - அரக்கோணம் யூனியன்
# 100 - கிராம ஊழியம்

***<u>நோக்கம்</u>:*** **2010 பிப்ரவரி 15** திங்கள் காலை 9 மணி முதல் **பிப்ரவரி 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **வேலூர் - அரக்கோணம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து **"வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்"** இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 பிப்ரவரி 15** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2010 பிப்ரவரி 19** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2010 பிப்ரவரி 15 - 19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பெத்தேல் கிறிஸ்டியன் அசெம்பிளி**
**43 - A, மோசூர் ரோடு,**
**அம்பேத்கார் நகர்,**
**அரக்கோணம் - 631 001.**
**வேலூர் மாவட்டம்.**
**செல்: 99942 16499**

**<u>நன்றி</u>** : உதவி செய்ய முன் வந்த Pr. A.M.S.**ஜோசப்** அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***<u>பிரயாணப்படி</u> :*** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***<u>முக்கிய அறிவிப்பு</u> :*** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***<u>சகல தொடர்புகளுக்கும்</u> :*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# பெரம்பலூர் - வேப்பூர் யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 14.12.2009 முதல் 18.12.2009 முடிய**



கர்த்தருடைய கிருபையால் பெரம்பலூர் மாவட்டம் – வேப்பூர் யூனியனில் 14.12.2009 முதல் 18.12.2009 வரை **“100 கிராம ஊழியம்”** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசி நாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகள் இவைகளை **பாஸ்டர். பர்னபாஸ்** பொறுப் பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ் நாட்டின் பல மாவட்டங் களிலிருந்து 59 கிராம ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் வேப்பூர் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை யெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் TVGM காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர், ஆடிட்டர் ஜான் ராஜசேகரன், சகோ. ராபின்சன்** ஆகியோர் கலந்துகொண்டார்கள். **பாஸ்டர் பர்னபாஸ் அவர்களும், சகோ.ராபின்சன்** அவர்களும் தேவசெய்தி கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.

இதன்பின்பு, கிராம ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்ய போகிற கிராமங்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பின்பு 12 குழுவினரும் கிராமங்களுக்குள் கடந்து சென்று, 5 நாட்கள் வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் இலவசமாக கொடுத்து ஊழியம் செய்தார்கள். ஊழியங்களை முடித்து மீண்டும் பெரம்பலூர் ஜெபவீட்டில் கூடி சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத் தினார்கள். இந்த ஜெபத்தில் **டாக்டர் காசிபாண்டியன்** ஜெபித்து, தேவசெய்தி கொடுத்தார்கள். 100–கிராம ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, நேசித்து வருகிற பெரம்பலூர் **பால் ஐயா** தன் மனைவியுடன் வந்து TVGM ஸ்தாபகர் **ஜெயசீலி கிறிஸ்டோபர் மற்றும் காரியதரிசி சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். **பாஸ்டர் பர்னபாஸ்** அவர்களும் பொன்னாடை போர்த்தி தன் அன்பை வெளிப்படுத்தினார்கள்.





கிராம ஊழியர்கள் யாவருக்கும் TVGM சார்பில் கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் மற்றும் பிரயாணப்படி வழங்கப்பட்டது. பாஸ்டர் பர்னபாஸ் யாவருக்கும் சிறப்பான இரவு விருந்து கொடுத்தார்கள்.





வேப்பூர் யூனியனில் மொத்தம் 11,900 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும், 20,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக்கொடிகளும் வழங்கப்பட்டன. ஊழியத்தின்போது சந்திக்கப்பட்டவர்களில் 227 பேர் தங்கள் விலாசங்களை கொடுத்து, தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரி மேரி செல்லாபாய் மணியம்மாள், லீதியாள், தேவகிருபை, சலோமி சம்மனசு**

நாங்கள் **குன்னம், அந்தூர்** ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று வீடுகள் தோறும் யோவான் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்து **இயேசுவே மெய்யான தேவன்** என்பதை கூறினோம். யாவரும் வாஞ்சையுடன் கேட்டார்கள். அந்தியூர் கிராமத்தில் தானியேல் என்ற வாலிபன் எங்களிடம் வந்து நான் ஞானஸ்நானம் எடுத்திருந்தும், இப்போது பீடி குடிக்கிறேன் என் மனதில் சமாதானம் இல்லை என்று தனக்காக ஜெபிக்கும்படி கேட்டான். நாங்கள் அவனுக்காக ஜெபித்தோம். மழை பெய்து கொண்டேயிருந்தாலும் நாங்கள் நனைந்து கொண்டே சென்று ஊழியங்களை செய்ய கர்த்தர் கிருபை கொடுத்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 940 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2 : சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராசு, மகாராஜன், நோவா.**

நாங்கள் மேலமாத்துார், கீழமாத்துார், மருதையன்கோயில், அழகிரிபாளையம், சடைக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தோம். **பிலிமிசை** என்ற கிராமத்தில் ஒரு பெண் சுவிசேஷப் புத்தகத்தை வாங்க மறுத்தாள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்களும், 950 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 3 : சகோ.ஜீவானந்தம், யோசுவா, இஸ்தாக்கி, எபிநேசர், ஸ்டீபன்ராஜ்.**

நாங்கள் மழையில் நனைந்துகொண்டே 9 கிராமங்களில் ஊழியம் செய்தோம். மக்கள் வாஞ்சையாக புத்தகத்தை வாங்கிக் கொண்டார்கள். அய்யப்ப பக்தர்கள் பலருக்கு புத்தகம் கொடுத்தபோது, அன்புடன் வாங்கிக் கொண்டார்கள்.

நாங்கள் தங்கியிருந்த இடத்தில் சிறுவர்களுக்கு கதை,பாட்டு சொல்லிக் கொடுத்து இயேசுவே மெய்யான கடவுள் என்பதை விளக்கினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 940 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 4 : சகோதரி ராணி சந்திரா, விமலா, செலின் ஜெயபால், ரெபேக்கா லட்சுமி,ஜோதிமணி**

நாங்கள் கிராமங்களில் வீடுகள் தோறும் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தபோது,யாவரும் பொறுமையாக கேட்டார்கள். பலருக்கு இயேசு என்றால் யார் என்றே தெரியவில்லை. நாங்கள் இயேசுவைப் பற்றி கூறியபோது, அமைதியாகக் கேட்டார்கள். ஒருவர் எங்களிடம் நானும் உங்களுடன் வருகிறேன், எனக்கு எவ்வளவு பணம் தருவீர்கள் என்று கேட்டார். அவரிடம் **இது கூலிக்காக செய்யும் வேலையில்லை. கடவுளுக்கு செய்யும் சேவை** என்று சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்டவராக சென்றார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 930 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 5 : சகோதரி டோரா லாசர், அந்தோணிமேரி, அமிர்தம், ஷீலா, ரோணிக்கம்.**

**பெண்ணக்கோனம்** என்ற கிராமத்தில் படிக்கிற பிள்ளைகள் தாங்கள் நன்றாக படிக்க ஜெபிக்கும்படி கேட்டார்கள். நாங்கள் ஆசீர்வதித்து ஜெபித்தோம். வேறு சிலர் எங்களைப் பார்த்து, இவர்கள் மை போடுகிறவர்கள் இவர்களிடம் ஒன்றும் வாங்காதீர்கள் என்று கூச்சல் போட்டார்கள். யோவான் புத்தகம் வாங்கின ஒரு பையனை அவனுடைய அம்மா ஏன் இதை வாங்கினாய் என்று அடித்ததை பார்த்தோம். முதியவர்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் சுவிசேஷம் சொன்னோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6 : சகோதரி வசந்தா,ஜெபமணி, அன்னக்கிளி, தெபோராள், கிளமெண்ட்ஸ்மேரி.**

**எரையூர்** என்ற கிராமத்தில் ஊழியம் செய்தபோது, ஒருவர் நீங்கள் எங்கள் கடவுளை முதலில் வணங்குங்கள், பிறகு நாங்கள் உங்கள் கடவுளை ஏற்றுக் கொள்கிறோம் என்றார். இவருக்கு அமைதியாக உண்மையான கடவுள் பற்றிக் கூறி கடந்து போனோம். இங்கு ஒரு பெரியவரிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, அவர் போங்கம்மா உங்க கடவுளை வணங்கினால் எங்களுக்கு காய்ச்சல் வரும் என்று சொன்னார். அப்போது ஒரு பாட்டி அவரிடம் அவங்க சொல்லுற வார்த்தையில நாலு நல்ல வார்த்தை இருக்கும் வாங்கி படியுங்கள் என்றார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 7 : சகோ.ஜோசப் பெஞ்சமின், சூசைமாணிக்கம், பால்ராஜ், இஸ்ரவேல், மாசிலாமணி.**

நாங்கள் **கழனிவாசல்** என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க சென்றபோது, கிராம சுகாதார மருத்துவமனையில் வேலைபார்க்கும் திரு.மனோகரன் என்பவர் எங்களைப் பார்த்தவுடன் சிகரெட் பிடிப்பதை தூக்கி எறிந்து விட்டு வரவேற்றார். இவருக்கு சுவிசேஷம் சொல்லி, யோவான் புத்தகம் கொடுத்தோம். ஊழியத்தை முடித்து அதே வழியில் திரும்பி வரும்போது அவர் எங்களிடம் ஐயா நீங்கள் கொடுத்த புத்தகத்தைப் படித்து விட்டேன். நான் இராமாயணம் படிப்பவன் என்று யோவான் புத்தகத்தை திருப்பி தந்து விட்டார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 500 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8 : பாஸ்டர் ஆல்வின், சகோ.செல்வராஜ், ஜெபமலைநாதன், பீட்டர், தாவீது தங்கவேல்.**

**தேவையூர், தம்பை** கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தபோது, பல அய்யப்ப பக்தர்கள் வாங்க மறுத்தார்கள். **மங்களமேடு** கிராமத்தில் யாவரும் ஆர்வமாக வாங்கி சத்தியத்தைக் கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரி கிரேஸ் பத்மா, லூயிஸ் அம்மாள், செல்லக்கனி, பிச்சையம்மாள்.**

**கீழப்புலியூர், சிறுகுடல், வாலிகண்டபுரம்** கிராமங்களில் ஊழியம் செய்த போது, மக்கள் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டு, யோவான் புத்தகத்தை வாங்கிக் கொண்டார்கள். **சிலர் எங்களிடம் இப்படி அலைகிறீர்களே இதினால் உங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டார்கள். உண்மையான தெய்வம் இயேசு தான் என்பதை அறியாதவர்களுக்கு அறிவிக்கிறோம்** என்று சொல்லிவிட்டு வந்தோம். மழை பெய்து கொண்டிருந்தாலும் நனைந்துகொண்டே மக்களை சந்தித்து சுவிசேஷம் கூறினோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்களும், 900 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 10 : சகோ.பிரேம் ஆனந்து, அந்தோணி, சாமுவேல், சிவக்குமார், அருள்ராஜ்**

**வேட்டைக்குடி** என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது ஒருவர் எங்களை அவர் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். அங்கு சென்றபோது, அவர் தன் மனைவியிடம் இவர்கள் சொல்லும் இயேசுவை ஏற்றுக்கொண்டால் நல்ல காலம் வரும் என்று சொன்னார்கள். அதனால் இவர்களை அழைத்து வந்தேன் என்றார். பக்கத்துவீட்டிலிருந்து ஒரு பெண் இவர்கள் ஜோசியம் சொல்வார்களா ? என்று கேட்டார். நாங்கள் உங்களுக்கு நல்ல காலம் பொறக்கபோறதைத் தான் சொல்ல வந்திருக்கிறோம் என்று இயேசுவின் நற்செய்தியை கூறினோம். **காடூர்** கிராமத்தில் மாலை போட்டு மலைக்கு செல்பவர்களுக்கு சுவிசேஷம் சொன்னோம். அமைதியாக கேட்டார்கள். சிலர் ஜெபிக்கும்படி சொன்னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 910 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 11 : சகோதரி கஸ்தூரி, மரியாள்,மேரி மீனா, ரூத் பகவதி,அன்னாள்.**

நாங்கள் 9 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். **நடக்க முடியாம லிருந்த ஒரு தாயாருக்காக ஜெபித்தோம். அவர்கள் எழுந்து நடக்க கர்த்தர் உதவி செய்தார்.** சிலர் படிக்க தெரியாது , புத்தகம் வேண்டாம் என்றார்கள். மொத்தம் 1150 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 12 : சகோதரி மரியம்மாள், சாந்தி, அபியேல், கிருபா, தேவபாக்கியம், எஸ்தர்.**

**கவுள்பாளையம்** என்ற கிராமத்தில் ஊழியம் செய்தபோது, ஒரு அம்மா எங்களை அழைத்து, தன்னுடைய 10 வயது மகன் 5 மாதமாக ஜுரத்தினால் கஷ்டப் படுவதாகவும், 40 நாட்கள் பெரிய

ஆஸ்பத்திரியில் வைத்து பார்த்துவிட்டு டாக்டர்கள் சென்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும்படி கூறினார்கள். எங்களிடம் பணம் இல்லாததினால் வீட்டுக்கே கொண்டு வந்துவிட்டோம். நீங்கள் வந்து அவனுக்காக ஜெபியுங்கள் என்று கூப்பிட்டார்கள். நாங்கள் போய் இயேசுவின் நாமத்தில் எண்ணெய் பூசி ஜெபித்துவிட்டு போய் விட்டோம். திரும்பி வரும்போது அந்த அம்மா மீண்டும் எங்களை கூப்பிட்டு வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் போய் பார்த்தபோது அந்த பையன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்திருந்தான். எங்களை டீ சாப்பிடுங்கள் என்று சொன்னான். அந்த அம்மா தன் மகன் சுகமானதைக் குறித்து மிகவும் சந்தோஷப் பட்டார்கள். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்களும், 680 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை!**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீதி. 3:6

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

| | |
|---|---|
| **நாள் : 31.01.2010** ஞாயிறு | **நாள் : 01.02.2010** திங்கள் |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**நடைபெறும் இடம்**

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

## 100-கிராம ஊழியம் தரிசன முகாம்

| **திருச்சியில்** | **புதுக்கோட்டையில்** |
|---|---|
| **நாள் :** 30.01.2010 (சனி) | **நாள் :** 06.02.2010 (சனி) |
| **இடம் :** Y.M.C.A Hall, புத்தூர். | **இடம் :** S.V.S. கல்யாணமண்டபம் |

**நேரம் :** மாலை 6 மணி

**கிராம தரிசன தேவசெய்தி**

**சகோ. P.T.கிறிஸ்டோபர்** - ஸ்தாபகர்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** C.E.O.

**சாட்சிகள் : 100–கிராம ஊழியர்கள், முழுநேர ஊழியர்கள்,**

**நோக்கம் : ஜெபக்குழு உருவாக்குதல் மற்றும் 100– கிராம ஊழியத்திற்கு தன்னார்வத் தொண்டர்களை எழுப்புதல்.**

**யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்!**

## TVGM சிறுவர் இல்லம் - திருச்சி , குண்டல்.

## சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !

**இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்.** மத்தேயு 18:5

திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்தில் 67 பிள்ளைகள் படிக்கிறார்கள். இவர்களுக்கு தங்குமிடம், உணவு, படிப்பு யாவும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு மாதத்திற்கு ரூ.1000/- தேவைப்படுகிறது. இன்னும் 33 பிள்ளைகளை மாதந்தோறும் தாங்குவதற்கான கர்த்தருடைய பிள்ளைகள் தேவை. ஜெபியுங்கள்.

**தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ?** யோபு 31:17.

## 2010 ம் ஆண்டில் உங்கள் பிறந்த நாள், திருமணநாளை TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியோடு கொண்டாட அன்புடன் அழைக்கிறோம்!

பகல் அல்லது இரவு உணவு 80 பேருக்கு

**மட்டன் பிரியாணி ( பாயாசத்துடன்) ரூ.5000/–**

**சிக்கன் பிரியாணி ( பாயாசத்துடன்) ரூ.3000/–**

**சைவ உணவு(வடை, பாயாசத்துடன்) ரூ.2500/–**



உங்கள் வசதிக்கு ஏற்றாற்போல் கொடுக்கும் பணத்திலும் உணவு வழங்கப்படும். நீங்களும் குடும்பமாக நேரில் வந்து, பிள்ளைகளோடு உங்கள் நேரத்தை மகிழ்ச்சியான முறையில் செலவிடலாம். நேரில் வர முடியா விட்டாலும் பணத்தை டிராப்ட், செக் ( அ) மணியார்டர் மூலம் அனுப்புங்கள். அந்த நாளில் எடுக்கப்படும் புகைப்படங்கள் அனுப்பி வைக்கிறோம்.

## நன்றி கூறுகிறோம்!

**2009** டிசம்பர் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த தேவபிள்ளைகளுக்கும், **விசேஷமாக கிறிஸ்மஸ் நாட்களில்** சிறுவர் இல்லப் பிள்ளைகள், 100–கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்கள், முழுநேர ஊழியர்கள், தொழுநோயாளர்கள், விதவைகளை நினைவு கூர்ந்து சிறப்பு காணிக்கைகளை அனுப்பி, அன்பளிப்புகளை வழங்கிய ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம்.

**கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!**

## இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
## துதி,கனம், மகிமை - இயேசுகிறிஸ்துவுக்கே!

உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கடிதம், ஈமெயில் மற்றும் தொலைபேசி மூலமாக ஜெபிக்கும்படி ஜெபவிண்ணப்பங்களை தெரியப்படுத்துகிறார்கள். கடந்த நாட்களில் இப்படி ஜெபவிண்ணப் பங்களை அனுப்பி ஜெபிக்கக் கேட்ட விசுவாசிகள் மற்றும் புறமத நண்பர்களின் வாழ்வில் இயேசு செய்த அற்புதங்கள் இதோ ....

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி தாஸம்மா, ஐரேனிபுரம்**

என் இளைய மகனின் கெட்ட நட்புகள் மாறி திருமணம் நடைபெற ஜெபிக் கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு திருமணத்தை நடத்தி தந்தார்.

**சகோதரி சரளா, பெங்களூர்.**

என் பக்கத்து வீட்டு சகோதரிக்கு திருமணமாகி 2 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லை. ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தோம். கர்த்தர் நல்ல பெண் குழந்தையை கொடுத்தார். மேலும் என் மகளுக்கு திருமணமாகி இருவரும் 4 வருடமாக பிரிந்து இருந்தார்கள். ஜெபிக்க கடிம் எழுதினேன். இப்பொழுது குடும்பமாக சமாதானத்துடன் இருக்கி றார்கள். தேவனுக்கே மகிமை.

**சகோ.செல்வராஜ், திருச்சி.**

உங்களிடமிருந்து வரும் வாக்குத்தத்த வசனங்கள் மிகுந்த ஆறுதலாக உள்ளது. எனது 2வது மகளுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்தது. கருப்பையில் அடைப்பு காணப்பட்டது. நானும் பொருத்தனையுடன் ஜெபித்தேன். மறுமுறை மருத்துவமனைக்கு சென்ற போது பரிசோதித்து விட்டு, அடைப்பு இல்லை. ஆப்ரேஷன் தேவையில்லை என்றார்கள். தேவனுக்கே மகிமை.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி ரேணுகாதேவி, ஈரோடு.**

எனது பணிஉயர்விற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஈரோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலகத்தில் பணிஉயர்வு கிடைக்க செய்தார். தேவனுக்கே மகிமை.

### 100-கிராம ஊழியம் பத்திரிக்கையின் மூலம் கர்த்தர் செய்த அற்புதம் இதோ!

**சகோதரி பாலா ஜெபராஜ், சென்னை**

எனது மகனின் வேலைக்காக காத்துக் கொண்டிருந்த வேளையில் 2009 அக்டோபர் மாத 100-கிராம ஊழிய பத்திரிக்கையில் **'நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்'** என்ற வசனம் இருந்தது. இந்த வாக்குத்தத்தத்தை சொல்லி ஜெபித்தோம். கர்த்தர் மகன் விரும்பிய கம்பெனியில் வேலையை கொடுத்தார்.

**அன்பானவர்களே!**

நீங்களும் கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த அற்புதங்களை சாட்சியாக எழுதி உடனே ஒரு தபால் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தேவனுடைய நாம மகிமைக்கென்று வெளியிடுகிறோம்.

## பத்திரிக்கை சந்தாவை புதுப்பித்து விட்டீர்களா?

1. 2010ம் ஆண்டிற்கான **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கை சந்தா செலுத்தி விட்டீர்களா ? அநேக வருடங்களாக சந்தாவைப் புதுப்பிக்க தவறியவர்களுக்கு தொடர்ந்து பத்திரிக்கை அனுப்ப முடியாத நிலையிலுள்ளோம். ஆகவே உடனே உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
2. உங்கள் முகவரி மாறும்போது புதிய, பழைய முகவரியை தெரியப்படுத்துங்கள்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கை வருமானாலும் தயவுசெய்து உங்கள் முகவரியை தெளிவாக எழுதி தெரியப்படுத்துங்கள்.

மேலும் 2010 ஜனவரி முதல் **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கை நல்ல தரமான தாளில் அச்சிடுவதால் கூடுதலாக பணம் செலவாகிறது. இந்த பத்திரிக்கையின் மூலம் ஆசீர்வதிக்கப்படுகிற மக்கள் கட்டாயம் இந்த தேவையில் பங்கு பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **தேவனுக்கே மகிமை!**

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 டிசம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 2009 டிசம்பர் மாத ஊழியங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. சரீர பெலவீனங்களினால் சில சகோதரிகள் விடுப்பு எடுக்க நேர்ந்ததினால் சற்று கடினமாக இரவு, பகலாக உழைக்க வேண்டியிருந்தது. ஆனாலும் கர்த்தர் மிகவும் அற்புதமாக ஒவ்வொருவரையும் பெலப்படுத்தினார்.

டிசம்பர் 23ம் தேதி ஒரு **நன்றி ஜெபக்கூட்டம்** வைத்து சகோதரிகள் யாவருக்கும் கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்க கர்த்தர் கிருபை செய்தார். F.G.P.C. உபதலைவர் **பாஸ்டர் P. ஜாய்சன்** அவர்கள் தனது குடும்பத்துடன் வந்து ஜெபத்தை நடத்தி, ஊழியர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கினார்கள். யாவருக்கும் சிறப்பு விருந்து கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

2009ம் ஆண்டில் சுவிசேஷ ஊழியம் செய்த கிராமங்களில் இந்த ஆண்டில் பின்தொடர்பணி செய்யவும், சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தவும் முயற்சி செய்து ஜெபித்து வருகிறோம்.

தொடர்ந்து 2010 ம் ஆண்டிலும் புதிய பெலத்துடனும், புதிய தரிசனங்களுடனும், புதிய அபிஷேகத்துடனும் கர்த்தருக்காக ஓட கர்த்தர் பெலன் தரும்படியாக ஜெபித்துக்கொள்ளுங்கள். **தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்சலின்**
**ஒருங்கிணைப்பாளர்.**

## 2010 பிப்ரவரி இயேசுவை விரும்புவோர் முகாம்

**மாவட்டம் :** தூத்துக்குடி **யூனியன்:** சாத்தான்குளம் **நாள் :** 27.02.2010

**கூடுமிடம்**
**பாஸ்டர் ஜஸ்டின், ஏ.ஜி. சர்ச்,**
**தோப்பு வளம் ரோடு,**
**காடு டீச்சர் டிரெயினிங் ஸ்கூல் எதிரில், சாத்தான்குளம் – 628 704**

**செல் : 9442998974**
**9943281640**

## சூறாவளிப்பட்டி ஏழைகள்







26.12.2009 அன்று திருச்சி –
**சூறாவளிப்பட்டியிலுள்ள** ஏழைகளுக்கு
இயேசுவின் அன்பைக் கூறி, ஜெபித்து,
உணவு பொட்டலங்கள் மற்றும் கிறிஸ்மஸ்
கேக் வழங்கப்பட்டது.
மேலும் அங்குள்ள ஏழை விதவைகளை
28.12.2009 அன்று TVGM தலைமை
ஆலயத்திற்கு வரவழைத்து,
புத்தாடைகள் வழங்கப்பட்டது.

## பஞ்சப்பூர் - தொழுநோயாளர் காலனி







26.12.2009 அன்று திருச்சி – **பஞ்சப்பூர்**
தொழுநோயாளர் காலனியில்
இயேசுவின் அன்பைக் கூறி, ஜெபித்து,
உணவு பொட்டலங்கள் ,கிறிஸ்மஸ் கேக்,
லுங்கி மற்றும் சேலைகள் வழங்கப்பட்டது.

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக்**
**கடன்கொடுக்கிறான்;**
**அவன் கொடுத்ததை அவர் திரும்பக்**
**கொடுப்பார்.** நீதி. 19:17

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** 2010ம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் **100–கிராம ஊழியம்** தடையில்லாமல் நடைபெறவும், கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு திறந்த வாசலை தேவன் கட்டளையிடவும், சுவிசேஷப் புத்தகங்கள் வாங்குவதற்கான தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** 2010ம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் TVGM **தரிசன முகாம்** நடைபெறுவதற்காக, தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை தேவன் நமது ஊழியத்தோடு இணைத்து, தமது நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக கருத்தாய் ஜெபியுங்கள்.

***புதன்:*** TVGM தலைமை அலுவலகத்திற்கும், கிளை அலுவலகத்திற்கும் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட, அர்ப்பணிப்புள்ள பிள்ளைகளை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

***வியாழன்:*** TVGM ஊழியத்தில் 2010 மார்ச் 31ல் கணக்கு முடிக்கும்போது கடன் இல்லாமல் முடிப்பதற்கு கர்த்தர் உதவி செய்யும்படியாக ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** ஒரிஸாவில் **மழிச்சலா, கொண்டிகுடா, லகுடா** ஆகிய இடங்களில் ஏற்ற வேளையில் ஜெபவீடு கட்டுமான பணியை தொடங்கவும், **குருதன் கோடு, மீடியாக்கியா** ஆகிய இடங்களில் ஜெபவீடுகள் கட்டுவதற்கு உதவி செய்யக்கூடிய பிள்ளைகளை கர்த்தர் எழுப்பவும் ஜெபியுங்கள்.

**2010**ம் ஆண்டில் அநேக ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டுவதற்கு பொருளாதார வாசல்களை தேவன் திறந்தரும்படியாக ஜெபியுங்கள்.

***சனி:*** கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் நிலத்திற்காக ரூ.15 லட்சத்தை கடைசி தவணை நாள் 13.02.2010க்குள்ளாக கர்த்தர் கிருபையாக சந்தித்து தரும் படியாக ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** **2010**ம் ஆண்டில் TVGM ஊழியத்தை நேசிக்கிற, ஜெபிக்கிற, கொடுக்கிற தேவபிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்விலும், குடும்பத்திலும் தேவன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களை கட்டளையிட கருத்தாய் ஜெபியுங்கள்.

## TVGM ஊழியங்களுக்காக காணிக்கை அனுப்புபவர்கள் கவனத்திற்கு

TVGM ஊழியத்திற்காக Bank to Bank மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் எந்த பேங்கில் அனுப்புகிறீர்களோ அந்த பேங்கில் தருகிற ரசீதை ஒரு ஜெராக்ஸ் எடுத்து எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் பேங்கில் சென்று கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

மேலும் TVGM ஊழியத்தை நேசித்து காணிக்கை அனுப்புகிற ஒவ்வொரு வருவருக்கும் எங்கள் அலுவலகத்திலிருந்து ரசீதும், நன்றிக்கடிதமும் உடனே அனுப்பி வருகிறோம். ஒருவேளை நீங்கள் பணம் அனுப்பி எங்களிடமிருந்து ரசீது மற்றும் நன்றிக்கடிதம் உங்களுக்கு வரவில்லையென்றாலும் தயவுசெய்து உடனே தெரியப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்**
**தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7**

## TVGM தலைமை அலுவலக முகவரி

**100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )**
**பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-**


**MR.STEPHEN CHRISTOPHER,**
**MANAGING DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**STD Ph : 0- 431 - 2607241**
**FAX : 0- 431 - 2607446**
**CELL Bro.Stephen : 94871 92763**
**Bro.P.T Christopher : 94435 44628**
**Email : 100village@tvgm.org**


***Website :***
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
**'100 கிராம ஊழியம்'** அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

**டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

**( அல்லது )**

**MR. STEPHEN CHRISTOPHER,**
**SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.**
**இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## குன்றத்துார் ஜெபவீடு பிரதிஷ்டை
## நாள் : 15.12.2009

எஸ்றா 6 : 16 **தேவனுடைய ஆலயப் பிரதிஷ்டையைச் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.**











**2010 ம் ஆண்டில் நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பாகவோ அல்லது சபையாகவோ ஆலயமில்லாத கிராமத்தில் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட முன்வருவீர்களா?**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி